DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 333/2022**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : காளீஸ்வரன்
Father/ Husband Name : கணேசன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது வழங்காவயலில் குடியிருந்து டைல்ஸ் ஒட்டும் வேலை பார்த்து வருகிறேன். எதிரிகள் மற்றும் அ.சா1யை தெரியும். அவர்கள் அனைவரும் என் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 08.07.2022-ம் தேதி காலை 11.00 மணியளவில் வழங்காவயலில் உள்ள அ.சா.2ன் வீட்டு அருகே வைத்து 1வது எதிரி தகாத வார்த்தை சொல்லி கண்ணத்தில் அறைந்தார். பிறகு அ.சா.1யை 3 முதல் 6 எதிரிகள் கல்லை துாக்கி அ.சா.1ன் மேல் போட போனார்கள். நானும் சாட்சி சேதுராமனும் விலக்கிவிட்டோம். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1னின் உடன்பிறந்த சகோதரியை தான் நான் திருமணம் செய்தேன். சம்பவம நடந்த போது எடுக்கப்பட்ட வீடியோ, ஆடியோவை நான் பாாத்திருக்கிறேனா என்றால் நான் பார்த்திருக்கிறேன் . வீடியோ அ.சா.1 தரப்பாலும், எதிரிகள் தரப்பிலும் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீடியோவில் நான் இல்லை என்றால் சரிதான், அந்த இடத்தில்தான் இருந்தேன். சாட்சி பாண்டியராஜன் எனக்கு தம்பி முறை. நான்

வழுங்காவயல் கிராமத்தில் வசிக்கிறேன் என்பதற்கு என்னிடம் எந்த அடையாள அட்டையும் இல்லை என்றால் சரியல்ல.

2. என்னை போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவ நடந்தன்றே 11.00 மணிக்கு மேல். சம்பவம் நடக்கும் போது போலீசார் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடம் எந்த சர்வே எண்ணில் நடந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த இடம் அ.சா.1னின் வீட்டுக்குள் நடந்ததா அல்லது வெளியில் நடந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, வீட்டுக்கு வெளியே வேலி அடைத்திருந்த இடத்தில் நடந்தது. நான் உண்மையிலேயே சம்பவத்தை விலக்கி விட்டு இருந்தால் வீடியோவில் இருந்திருப்பேன் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. சம்பவம் இடத்தை சுற்றி பல வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

3. சம்பவ இடத்திற்கு பக்கத்தில் உள்ள மதியழகன், பழனி ஆகியோருக்கு சம்பவம் பற்றி தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் சுமார் 30 நிமிடங்கள் நடந்தது. நானும் அவர்களுடன் காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 11.30 மணியளவில் சென்றேன். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுக்கும் போது வழக்கறிஞர் வைத்து தான் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அ.சா.1 எனக்கு மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் வழுங்காவயல் கிராமத்தில் வசிக்கவில்லை என்றும் எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. என்னை அ.சா.1 தான் சாட்சி சொல்ல கூட்டிவந்தார் என்றால் சரிதான். அ.சா.1 நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 333/2022**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : பாண்டியராஜன்
Father/ Husband Name : சேதுராமன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது வழங்காவயலில் குடியிருந்து சமையல் வேலை செய்கிறேன். கடந்த 07.08.2022-ம் தேதி மாலை 05.00 மணிக்கு ஆறாவயல் போலீசார் அ.சா.1னின் ஐயப்பன் வீட்டுக்கு அருகில் வந்து அங்கு கல் உடைத்த குற்ற சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் பி.எஸ்.சி கேட்டரிங் மற்றும் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படித்துள்ளேன். பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் இடத்திற்கு இடதுபுறம் யாருடைய இடம் உள்ளது என்றால் இடது புறம் ஐயப்பன் வீடு, வலதுபுறம் லெட்சுமணன் வீடும், காலி நிலமும் உள்ளது. சம்பவ இடத்திற்கு தெற்கே என்ன உள்ளது என்றால் தெற்கே பூமாதேவி வீடும் காலி இடமும் உள்ளது, வடக்கே சாலை உள்ளது. மேற்படி சாலையில் தான் சம்பவம் நடைபெற்றது என்றால் இல்லை, அ.சா.1னின் இடத்தில் நடைபெற்றது. அ.சா.1க்கும், கிராமத்தார்களுக்கும் இடையே ஏறத்தாழ 2020 முதல்

பல்வேறு நீதிமன்றங்களில் வழக்கு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் எத்தனை கையெழுத்து பெற்றார்கள் என்றால் ஒரு கையெழுத்து பெற்றார்கள்.

2. அதை காவல் நிலையத்தில் வைத்து வாங்கினார்களா என்றால் இல்லை, சம்பவ இடத்தில் வைத்து வாங்கினார்கள். இன்று சாட்சி சொல்ல என்னை அ.சா1 தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் சாட்சி கையெழுத்து போடும்போது ஹரிஹரன் இருந்தார். ஹரிஹரன் தேவகோட்டையை சேர்ந்தவர், நான் அழைத்ததன் பேரில் அந்த இடத்திற்கு வந்திருந்தார்.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.